**O.S.No. :40/2023**

**Dated:24.03.2025**

**வா.சா.1:சதீஷன்; த/பெ.ரவிந்தரன்**

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

1. நான் தற்போது Palakadu Fantasy Park-ன் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். இதற்கு முன்பு Fun city எனும் நிறுவனத்தில் வேலை செய்தேன். இவ்வழக்கை Fun city நிறுவனம் தான் தாக்கல் செய்துள்ளது. Nilgiris Amusement and Eco park Limited எனும் நிறுவனம் தற்போது செயல்பாட்டில் இல்லை அது 2002-ல் மூடப்பட்டது. 2023-ல் இவ்வழக்கு தாக்கல் செய்யும் சமயத்தில் மேற்சொன்ன Nilgiris Amusement and Eco park Limited நிறுவனம் செயல்பாட்டில் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.1 கடிதம் எந்த தேதியில் வழங்கப்பட்டது என தெரியவில்லை என்றால் சரிதான். நான் எனது நிரூபண ஆணையுறுதி ஆவணத்தில் வா.சா.ஆ.1 25.01.2023 தேதியிட்டது என குறிப்பிட்டுள்ளது. 2002-ல் Nilgiris Amusement and Eco park Limited மூடப்பட்டதால் வா.சா.ஆ.1 ஐ 2023-ல் வழக்கு சாத்தியம் இல்லை என்றால் சரிதான். நான் 1998-1999-ல் மேற்சொன்ன Nilgiris Amusement and Eco park Limited-ல் கண்காணிப்பாளராக பணியாற்றினேன். 1999 ற்கு பிறகு நான் Nilgiris Amusement and Eco park Limited எந்த குறிப்பிட்ட பொறுப்பையும் வகிக்கவில்லை. ஆனால், வேலை காரணமாக அந்நிறுவனத்திற்கு கேரளாவில் இருந்து வந்து செல்வது உண்டு. 2002 வரை தான் நான் அந்நிறுவனத்திற்கு வந்து சென்றிருக்க முடியும் என்றால் சரிதான். பிரகாஷ் என்பவர் அந்நிறுவனத்தில் மேலாளராக பணியாற்றினார் என்ற விவரம் எனக்கு தெரியும். அவர் எந்த தேதி முதல் எந்த தேதி வரை வேலை செய்தார் எனக்கு தெரியாது. இவ்வழக்கின் வாதுரையில் நான் தான் கையொப்பம் இட்டேன். 2023 -ல் இவ்வழக்கை தாக்கல் செய்யும் போது நான் நிறுவனத்தின் மேலாளராக இருந்ததால் தான் குறிப்பிட்டு இவ்வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.1-

ஐ எங்களது நிர்வாக மேலாளர் அசோகன் என்பவர் தான் வழங்கினார். அந்நிறுவனத்தில் மொத்தம் 12 இயக்குநர்கள் வரை உள்ளனர். மேற்சொன்ன Nilgiris Amusement and Eco park Limited என்ற நிறுவனம் எப்போது நிறுவப்பட்டது என எனக்கு நினைவில் இல்லை. இந்நிறுவனத்தில் Articles of Association and Memorandum of Association தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. Board Resolution தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன மூன்றையும் தாக்கல் செய்யாததால் அசோகன், நானும் இவ்வழக்கை தாக்கல் செய்ய வழங்கியதாக சொல்லும் வா.சா.ஆ.1 செல்லத்தக்கது அல்ல என்றும் இவ்வழக்கும் நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல. வாதி நிறுவனம் 1998 கிரையப்பத்திரத்தின் மூலமாக மொத்தம் 13.60 ஏக்கர் கிரையம் பெற்றதாக சொல்லும் நிலையில் அதை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். அதை எனது நிரூபண ஆணையுறுதி ஆவணத்துடன் குறியீடு செய்து குறிப்பிட்டுள்ளேனா என்றால் அதை பற்றி எனக்கு தெரியவில்லை. அது குறியீடு செய்யப்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. வாதி நிறுவனம் 13.60 ஏக்கர் நிலத்திற்கு உரிமையானது என்பதை காட்ட ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2. வாதி நிறுவனத்தின் இடத்தில் Fun city எனும் Amusement and park தொடங்கினோம் என்றால் சரிதான். ஆனால், எப்போது தொடங்கப்பட்டோம் என்று நினைவில் இல்லை. அதை 2001-ல் மூடிவிட்டோம். அதனால் 13.60 ஏக்கர் நிலத்தை பிரித்து 3ஆம் நபர்களுக்கு மனைகளாக கிரையம் கொடுக்க ஆரம்பித்தோம். மனைகளாக பிரித்து Layout முறைப்படி தொட்டபட்டா பஞ்சாயத்தில் அனுமதி பெற்றுவிட்டோமா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. முதலில் நாங்கள் பிரதிவாதிக்கு 09.07.2012-ல் 3 ½ சென்ட் நிலத்தை கிரையம் கொடுத்தோம், அந்த நிலத்தை பொறுத்து பாதை தொடர்பான பிரச்சினை இருந்தது என்றால் சரிதான். நாங்கள் மேற்சொன்ன 3 1/0 சென்ட்டை ஒட்டி நாகேந்திரன் என்பவருக்கு 1 மனை கிரையம் கொடுத்தோம்

என்றால் சரிதான். நாகேந்திரனுக்கு கிரையம் கொடுத்த மனைக்கு பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த மேற்சொன்ன 3 ½ சென்ட்டை தான் வழியாக காண்பித்திருந்தோம் என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. மேற்சொன்ன இடத்தில் பிரதிவாதி வேலி அமைக்கும் போது நாகேந்திரன் அது தனது பாதை என இடையூறு செய்ததால் தான் நாங்கள் வாதிக்கு வேறு நிலம் வழங்குவதாக ஒப்புக்கொண்டோம் என்றால் சரிதான். பிரதிவாதிக்கு 1 வருடம் கழித்து அதே சர்வே எண்ணில் வேறு 3 ½ சென்ட் நிலம் கொடுத்து அதற்காக Exchange பத்திரம் ஏற்படுத்தினோம் என்றால் சரிதான். அது வா.சா.ஆ.2 உடன் இணைக்கப்பட்டுள்ள வரைபடத்தில் மஞ்சள் வண்ணத்தில் 5 மீட்டர் அகலம் வழி பாதையை காண்பித்துள்ளோம் என்றால் சரிதான். 24.07.2013-ல் மேற்சொன்ன Exchange பத்திரம் ஏற்படுத்தும் தேதியில் அங்கு நாங்கள் குறிப்பிட்டது போல 5 மீட்டர் அகல சாலையே இல்லை என்றால் சரியல்ல. நாங்கள் சாலை அமைத்து தான் கொடுத்திருந்தோம். நான் மேற்சொன்ன இடத்தை பார்வையிட்டுள்ளேன். அந்த சாலை தார் சாலையா அல்லது சிமெண்ட் சாலையா என எனக்கு தெரியவில்லை. நான் கடைசியாக 2020-ல் அந்த இடத்தை பார்வையிட்டேன். 2020-ல் நான் பார்வையிடும் போது அந்த சாலை இருந்ததா என எனக்கு நினைவில் இல்லை. அந்த சாலை எந்த சர்வே எண்ணில் வருகிறது என எனக்கு தெரியாது. இன்று வரை அங்கு நான் சொல்வது போல் எந்த சாலையும் கிடையாது என்றால் சரியல்ல. சாலையாக காண்பிக்கப்பட்டிருக்கும் இடத்தில் ஆரம்பத்தில் இருந்து தற்போது வரை தண்ணீர் ஓடை தான் உள்ளது என்றால் சரியல்ல. சாலையில் அதிக மழை பெய்த பின்பு சாலை சேதமாகி தற்போது தண்ணீர் ஓடையாக இருப்பது உண்மை தான். அந்த 5 மீட்டர் அகலம் சாலை வாதி நிறுவனத்திற்கு உரிமையானது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் அது பற்றி எனக்கு தெரியவில்லை. தற்போது பிரதிவாதி தனது இடத்தில் வேறு பாதை வழியாக செல்ல முடியும் அது அவரது இடத்தில் இருந்த எந்த திசையில் உள்ளது என எனக்கு தெரியாது. வா.சா.ஆ.2-ன் படி

பிரதிவாதிக்கு வாதி நிறுவனம் பிரதிவாதி இடத்திற்கு பாதை வழங்க கடமைப்பட்டது என்றால் சரிதான். தற்போது 5 மீட்டர் அகல சாலை அங்கு இல்லை. தண்ணீர் ஓடை தான் உள்ளது. பிரதிவாதி தனக்கு வழங்கப்பட்ட இடத்தை விட 1 செண்ட் ஆக்கிரமித்துள்ளார். எந்த திசையில் ஆக்கிரமித்துள்ளார் என எனக்கு தெரியவில்லை. நான் எனது வாதுரையில் பிரதிவாதி மேற்சொன்ன 5 மீட்டர் அகல சாலையில் தான் 1 செண்ட்டிற்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 5 மீட்டர் அகல சாலை இருந்த இடத்தில் தற்போது தண்ணீர் ஓடை தான் உள்ளது என கூறும் நிலையில் பிரதிவாதி எங்கு ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என என்னால் கூற இயலாது. ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக சொல்லும் 1 செண்ட் இடமும் எந்த சர்வே எண்ணில் உள்ளது என எனக்கு தெரியாது. மேற்சொன்ன 1 செண்ட் ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் இடத்திற்கு வாதி நிறுவனம் தான் உரிமையானது என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ளோன என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்சொன்ன 1 செண்ட் இடம் வாதியின் இடம் இல்லை என்றால் அது ஆக்கிரமிப்பு ஆகாது என்றால் சரிதான். மேற்சொன்ன 1 செண்ட் சர்வே எண்.733/2-ல் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. சர்வே எண்.733/2 வனத்துறைக்கு சொந்தமான இடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நாங்கள் தாக்கல் செய்த மனுவின் படி நீதிமன்ற ஆணையர் வழக்கு சொத்தை பார்வையிட்டு தனது அறிக்கையை தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கையில் நான் வாதுரையில் குறிப்பிட்டுள்ள 4 எல்லைகள் தவறு என குறிப்பிட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையர் தனது அறிக்கையை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக கூறும் பிரதிவாதி இடத்தின் கிழக்கில் உள்ள இடமானது சர்வே எண்.733/2-ல் உள்ளது என குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நில அளவையரின் வரைபடத்திலும் புல எண்.733/1 ஏ பகுதி காலி இடத்திற்கு தென் கிழக்கில் சர்வே எண்.733/2 இடம்

உள்ளதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். அதே போல் அந்த இடத்திற்கு வட மேற்கிலும் உதகை நகராட்சி எனும் குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். பிரதிவாதி தனது வீடு மழையினால் சரியக்கூடாது என்பதற்காக ரிவர்ட்மன்ட் சுவர் மற்றும் அதற்கு துணையாக மண் மூட்டைகளும் அந்த மண் மூட்டைகள் நனையக்கூடாது என்பதற்காக அதை பாதுகாக்க தற்காலிக ஷீட் அமைத்துள்ளார்கள் என்றும் அதுவும் வனத்துறைக்கு சொந்தமான இடத்தில் தான் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும் வாதியின் இடத்தில் எந்த ஆக்கிரமிப்பும் செய்யப்படவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதியின் இடம் சரிவான பகுதியில் உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதியின் இடத்திற்கு வடமேற்கு திசையில் உள்ள இடங்கள் அனைத்தும் வனத்துறையினருக்கு சேர்ந்த இடம் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. அந்த வனப்பகுதியில் இருந்து வரும் மழைத்தண்ணீரானது நாங்கள் 5 மீட்டர் அகல பாதையாக காண்பித்த இடத்தில் தான் வந்து சேர்ந்து ஓடையாக செல்லும் என்றால் சரியல்ல. 5 மீட்டர் அகல பாதையாக காண்பித்துள்ள இடம் முழுவதும் சர்வே எண்.733/2-ல் தான் உள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 5 மீட்டர் பாதையாக காண்பித்துள்ள இடத்திலும் மொத்தம் ஓடை தான் உள்ளதால் பிரதிவாதி அசோகனை சந்தித்து வேறு வழி கொடுக்குமாறு கேட்டுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் 16.03.2018 தேதியிட்ட ஆவணத்தில் எங்களது நிர்வாக மேலாளர் அசோகன் கையொப்பம் இட்டுள்ளார் என்றால் சரிதான். **(அது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. பி.வா.சா.ஆ.1-ன் படி பிரதிவாதியை அசோகன் வேறு வழியில் பிரதிவாதியின் செலவில் சாலை அமைத்துக்கொள்ளுமாறு கூறிவிட்டு அதன் அடிப்படையில் பிரதிவாதி ரூ.3 லட்சம் செலவு செய்து சாலை அமைத்தார் என்றால் அதையும் கூறியப்படி அசோகன் திருப்பி வழங்கவில்லை என்றாலும் சரியல்ல. மேற்சொன்ன 5 மீட்டர் அகல சாலை எந்த காலத்திலும் இல்லை என்பதால் தான் எங்களது நிர்வாக மேலாளர் பி.வா.சா.ஆ.1-ல் வேறு பாதை தருவதாக ஒப்புக்கொண்டுள்ளார்

என்றால் சரியல்ல. பிரதிவாதி ரிவர்ட்மன்ட் சுவர் ஏற்படுத்திய பின்பு நாங்கள் பணம் கேட்டு அவரை மிரட்டினோம் என்றும் அவர் பணம் தர மறுத்ததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் இந்த பொய் வழக்கை தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றாலும் சரியல்ல.

**Sd./A.Mohanakrishnan,**
District Munsif,
Udhagamandalam

Uploaded by
Typist.